NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 3 December 2021

### கொவிட்-19 தொற்றுடன் இணைந்து வாழ்வது குறித்த அரசாங்கத்தின் முடிவு

# முதியோரும் வசதி குறைந்தோரும் அசௌகரியமாக உணரக்கூடும்

கொவிட்-19 தொற்றுடன் இணைந்து வாழ்வது என்ற சிங்கப்பூரின் முடிவால் மூத்த குடிமக்களும் வறியவர்களும் பெரும்பாலும் அசௌகரியமாக உணரலாம் என்பது கொள்கை ஆய்வுக் கழகத்தின் புதிய கருத்தாய்வு மூலம் தெரிய வந்துள்ளது.

அதே நேரத்தில், கொவிட்-19 தடுப்பூசிக்கான ஆதரவு அதிகமாகவே உள்ளது. குடிமக்களுக்கும் நீண்டகால அனுமதி பெற்றுள்ளோருக்கும் தடுப்பூசி கட்டாயமாக்கப்பட வேண்டும் என்று பத்தில் ஏழு பேர் தெரிவித்தனர்.

மேலும், கொவிட்-19 தொற்று அபாயத்தைக் குறைக்க ஆண்டுதோறும் கூடுதல் (பூஸ்டர்) தடுப்பூசி போட்டுக்கொள்வது முக்கியம் என்பதைப் பத்தில் ஒன்பது பேர் ஒத்துக்கொண்டனர்.

இக்கருத்தாய்வு நான்கு மாத காலம் நடத்தப்பட்டது. அந்தக் காலகட்டத்தில் கொவிட்-19 பெருந்தொற்றை அரசாங்கம் எதிர்கொண்டவிதம் மனநிறைவு அளிக்கிறதா என்று கேட்டதற்கு, மாறுபட்ட பதில்கள் கிடைத்தன. ஆனாலும், கொவிட்-19 தொற்றுக்கு எதிரான போரில் சிங்கப்பூர் வெல்லும் என்பதில் அவர்கள் அனைவரிடத்திலும் ஒருமித்த கருத்து நிலவியது.

கொவிட்-19 தொற்றுடன் இணைந்து வாழ்வதில் மக்களின் மனப்போக்குகள் என்ற அந்த ஆய்வறிக்கை நேற்று வெளியிடப்பட்டது.

இவ்வாண்டு ஜூலை நடுப்பகுதியில் இருந்து நவம்பர் இறுதிவரை 12 கட்டங்களாக நடத்தப்பட்ட இணையவழிக் கருத்தாய்வுகள் மூலம் சேகரிக்கப்பட்ட தரவுகளை அந்த ஆய்வு பயன்படுத்தியது. ஒவ்வொரு கட்டத்திலும் 21 வயதும் அதற்குமேல் வயதுடைய 500க்கு மேற்பட்டோரிடம் இருந்து கருத்துகள் திரட்டப்பட்டன.

“முதியவர்களையும் வசதி குறைந்தவர்களையும் ஒப்பிடுகையில், கொவிட்-19 உடன் இணைந்து வாழ்வதில் இளையர்களும் வசதி படைத்தோரும் அதிக ஆர்வத்துடனும் தயாராகவும் இருப்பது தெரிய வந்தது,” என்று இந்தக் கருத்தாய்விற்குத் தலைமையேற்ற கொள்கை ஆய்வுக் கழகத்தின் முதன்மை ஆய்வாளர் மேத்யூ மேத்யூஸ் கூறினார்.

“இது எதிர்பார்க்கப்பட வேண்டியதுதான். கொவிட்-19 தொற்று முதியவர்களை மோசமாக பாதிக்கலாம் என்று அறிவியல் கூறுகிறது. அதனால் அத்தொற்றுடன் இணைந்து வாழ்வது குறித்து அவர்கள் கவலைகொள்ளக்கூடும்,” என்றார் திரு மேத்யூஸ்.

சிங்கப்பூர் அரசியல் தலைமைத்துவம் குறித்தும் புதிய இயல்புநிலையில் சமூக நடவடிக்கைகளை மீண்டும் தொடங்குவது குறித்தும் எந்த அளவிற்கு நம்பிக்கை கொண்டுள்ளனர் என்பன போன்ற வினாக்கள், ஆய்வில் பங்கேற்றவர்களிடம் கேட்கப்பட்டது.

## இளையரிடம் மிகுந்த நம்பிக்கை

பொதுவாக, வெளியில் சென்று உண்ணுவதிலும் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துவதிலும் இளையர்களைக் காட்டிலும் முதியவர்களிடம் நம்பிக்கை குறைந்து காணப்பட்டது.

அதாவது, அறுபதைத் தாண்டியோரில் 40 விழுக்காட்டினர், கொரோனா பரவல் இன்னும் இருப்பதால் வெளியில் சென்று உண்ண முடியும் என்பதில் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. மாறாக, 20-29 வயதிற்குட்பட்டோரில் நால்வரில் ஒருவரிடம் மட்டுமே இந்த நம்பிக்கையின்மை காணப்பட்டது.

அதேபோல, குறைந்த வருமானம் ஈட்டுவோரில் பலரும் பெரிய அளவிலான நேரடி நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளவும் பொழுதுபோக்குப் பயணங்களை மேற்கொள்ளவும் முடியும் என்பதில் உறுதியாக இல்லை.

மாதம் 3,000 வெள்ளிக்கும் குறைவாக வருமானம் ஈட்டுவோரில் 63 விழுக்காட்டினர், கொரோனா தொற்று குறைவாக உள்ள நாடுகளுக்குச் செல்ல முடியும் என்ற நம்பிக்கை கொண்டிருக்கவில்லை.

மாறாக, 6,000 வெள்ளிக்குமேல் ஈட்டுவோரில் இந்த நம்பிக்கையின்மை விகிதம் 43 விழுக்காடாக இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இருப்பினும், ஜூலையில் கிட்டத்தட்ட 77 விழுக்காடாக இருந்த ஒட்டுமொத்த மனநிறைவு விகிதம், அரசாங்கம் கடுமையான நிலைத்தன்மை நடவடிக்கைகளை அறிவித்ததைத் தொடர்ந்து 59 விழுக்காடாகக் குறைந்துவிட்டது.

பின்னர் பல கொவிட்-19 கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதும், நவம்பர் நடுவில் அவ்விகிதம் 64 விழுக்காட்டிற்கு உயர்ந்தது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.